ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2176/10- 2020 මැයි මස 19 වැනි අඟහරුවාදා - 2020.05.19
2176/10 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம்**

3 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக, நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம் திருத்தியமைக்கப்பட்டவாறான, 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 05 ஆந் திகதிய 2152/32 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலிலுள்ள 2 ஆம் பந்தியின் உப பந்தி (ஒ) இற்கு உடனடுத்து பின்வரும் உப பந்திகளை உட்சேர்ப்பிப்பதன் மூலம் திருத்தியமைக்கின்றேன்.

(ஓ) சுகாதாரப் பராமரிப்பு மற்றும் சுதேச மருத்துவ சேவைகள், சுகாதார சேவைகள் திணைக்களம், இலங்கைத் தரைப்படை, இலங்கை கடற்படை, இலங்கை வான்படை, இலங்கை பொலிஸ் மற்றும் கொவிட் மையம் (COVID- 19 பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மையம்) என்பனவற்றின் கோரிக்கையின் பேரில் 1978 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க முதலீட்டுச் சட்டத்தின் பிரிவு 17 இன் கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ள ஏற்றுமதி சார்ந்த ஏதேனுமொரு நிறுவனத்தினால் சுகாதாரப் பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் அவற்றினை ஒத்த பொருட்கள் வழங்கப்படுகையில் அல்லது நன்கொடையாக கையளிக்கப்படுகையில்,

(ஔ) நாட்டின் COVID- 19 தொற்றுநோயினை எதிர்கொண்டு சுகாதார சேவைகளை வழங்குவதற்கு தேவையான மருத்துவ, அறுவை சிகிச்சை மற்றும் பல் கருவிகள், இயந்திரங்கள் உள்ளிட்ட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், உதிரிப்பாகங்கள் மற்றும் அதன் பாகங்கள், மருத்துவமனை / மருத்துவ தளபாடங்கள் மற்றும் மருந்துகள், இரசாயனங்கள் மற்றும் அதனை ஒத்த பொருட்களை, சுங்க பணிப்பாளர் நாயகத்தின் ஒப்புதலுடன், சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சின் செயலாளரின் பரிந்துரையின்

பேரில் , இறக்குமதி செய்து அல்லது இறக்குமதி செய்து வழங்குகையில் அல்லது இறக்குமதிசெய்து நன்கொடையாக சுகாதார மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சின் செயலாளருக்கு கையளிக்கையில், மேற்கூறியவற்றில் எந்தவொரு பகுதியளவு அனுப்புப் பொருள் / சரக்குகளுக்கு இது வழங்கப்படாது என்பதோடு இது 2020, திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் மாத்திரம் பயன்வலுப்பெறுதல் வேண்டும்.

இக் கட்டளையானது, 2020, மே மாதம் 19 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறுதல் வேண்டும்.

**மஹிந்த ராஜபக்ஷ,**
நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை
அபிவிருத்தி அமைச்சர்.

நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு 01,
2020, மே 19.

07-124

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.